DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: CC. No 4/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ரேவதி(தலைமை காவலர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, present A2,A3,A4 absent. u/s 355Petition filed and allowed)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 23.02.2026

---

**முதல் விசாரணை**

1.நான் தற்போது திருவாடானை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் வழக்கின் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு முகமதுசைபுல் கிசாம் பணியிடை மாறுதலில் சென்று விட்டபடியால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.03.2023 தேதி காலை சுமார் 9.00 மணியளவில் திருவாடானை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.முகமது சைபுல்கிசாம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருக்கும் போது கோவிந்தமங்கலம்

கிராமத்தை சேர்ந்த ஹரிபாஸ்கர் என்பவர்நிலையம் ஆஜராகி கொடுதத புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்றஎண் 57/23 u/s 294(b),323,506(i) IPC and 4 TNPHW ACT ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2.பின்னர் வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்ட சார்பு ஆய்வாளர் அன்றையதினமே காலை 10.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.4 முதுதுசாமி, சாட்சி ராணி ஆகியோர் முன்னிலையில் பார்வைமகசர், வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வைமகசர் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

3.பின்னர் அ.சா.1 ஹரிபாஸ்கர் அ.சா.2 வெள்ளையம்மாள் அ.சா.3 முத்துகுமார், அ.சா.4 முத்துசாமி மற்றும் சாட்சிகள் செல்லம், மூர்த்தி, ராணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். அதன்பிறகு காயம்பட்ட நபரான அ.சா.1 அ.சா.2 ஆகியோருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் கோகுல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1.அ.சா.2 க்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என காயச்சான்றுகள் பெற்றார். அந்த காயச்சான்றுகள் முறையே **அ.சா.ஆ.5, அ.சா.ஆ 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**4.** வழக்கின் எதிரிகளை கைதுசெய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5.பின் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது u/s 294(b),323,506(i) IPC and 4 TNPHW ACT கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.